www.tamilarangam.net

ஈழச்செய்தி
EPIC

ஆகஸ்டு - 1990 வெளியீடு - 13.

# யாழ். பிரதான வீதியின் ஒரு பகுதி தரைமட்டம்! உணவுக்குத் தட்டுப்பாடு

## மக்கள் மாட்டு வண்டிகளில் உடைமைகளுடன் ஓட்டம்
## நேரில் சென்று திரும்பிய ராய்ட்டர் நிருபர் கூறுகிறார்

(ராய்ட்டர் - நிருபர் றொபர்ட் மவுண்ஃபாட்)

யாழ்ப்பாணம் ஜூன் 28

யாழ்ப்பாண பிரதான வீதி கட்டிடங்கள் இலங்கைவிமானப்படையினரின் குண்டுவீச்சால் இடிந்து போயுள்ளன. நகரின் ஒரு பகுதி தரைமட்டமாக்கப் பட்டுள்ளது.

குண்டுவீச்சின் மத்தியிலும் இடிந்த எரிந்து கொண்டுள்ள கட்டிடங்களில் இருந்து உணவு, மருந்துப் பொருட்களை எடுக்க மக்கள் முண்டியடிக்கிறார்கள்.

16ம் நூற்றாண்டு டச்சுக் கோட்டைக்குள் தமிழ் தீவிரவாதிகளால் சிக்க வைக்கப்பட்டிருக்கும் 225 ராணுவ மற்றும் பொலிஸ் படையினரிடமிருந்து வரும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மத்தியில் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் கடைகளில் இருந்து பொருட்களை அகற்ற முனைகின்றனர்.

கடும் [illegible] நடக்கும் பகுதிகளில் இருந்து யாழ். [illegible] தமது உடைமைகளை [illegible] மாட்டு வண்டிகளிலும் [illegible] ட்ராக்டர்களிலும் ஏற்றிக்கொண்டு இடம் பெயர்கின்றனர்.

குண்டு வீச்சினால் சேதமான கட்டிடங்களில் கன்னியர் மடமும், அநாதைகள் விடுதியும் அடங்குகின்றன.

நாங்கள் எங்கு ஓட முடியும்? குண்டு வீச்சு விமானங்களை கண்டால் நாங்கள் ஒளிந்து கொள்கிறோம் என்று ஒரு யாழ். வாசி கூறினார்.

கும்மிருட்டில் பீதி கொண்டிருக்கும் இந்த நகரத்தின் மீது ஹெலிக் கொப்டர்கள் சுற்றிவந்து தெரியாத இலக்குகள் மீது '50-கலிபர்' ஆயுதங்களால் சுடுகின்றன. அத்துடன் குண்டுகளும் போடப்படுகின்றன.

வீடுகள், கோயில்கள், பாடசாலைகளில் பதுங்கு குழிகளை மக்கள் வெட்டியிருப்பதால் உயிரிழப்புகள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. வேட்டுச் சத்தம் முதலில் கேட்டதும் [illegible] பங்கள் விளக்கை அணைத்துவிட்டு குழிகளுக்குள் ஓடுகின்றன.

தமது [illegible] யாழ்ப்பாணத்தில் பிரதான [illegible] பண்ணிலும் [illegible] ருக்கும் விடுதலைப் புலிகள் டிரக் வாகனத்தி[illegible] பூட்டப் பட்டுள்ள இயந்திர [illegible] பாக்கி மூலமும் கிரனைட் ஏவாயுதம் மூலமும் ஹெலி கொப்டர் தாக்குதலுக்கு பதில் கொடுக்கின்றனர்.

விமான தாக்குதலின் மத்தியிலும் கோட்டைக்குள் 225 இராணுவ பொலிஸ் படையினரை புலிகள் தொடர்ந்து சிக்க வைத்துள்ளனர்.

நகரின் வேறு ஒரு பகுதியில் அரிசி வாங்குவதற்காக மக்கள் நீண்ட கியூவில் நிற்பதை காணமுடிகிறது. எா பொருள் 10 மடங்கு விலை அதிகரிப்புடன் விற்பனையாகிறது.

வடக்கின் ஏனைய பகுதிகளில் மருந்தும், உணவும், எரி பொருளும் பற்றாக் குறையாக உள்ளது. வவுனியா ஒமந்தையில் காயமடைந்த மூன்று நபர் மக்களை 75 மைல்களுக்கு அப்பால் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல உதவ, மாறுபக்திரீமையாளர் [illegible] அதிகள் வேண்டிவ[illegible].

அக்கி முகாம் [illegible] பிரதான ஹெலிகொப்டர் தாக்குதலால் பலியானவர்கள் அடங்குள்ளனர். [illegible] பட்டத் தட்டுக்களின் கிழ [illegible] ந்திருந்த எவரு [illegible] லை. [illegible] வயது சிறுவனின் முகத்திலும் கழுத்திலும் பாய்ந்த சன்னங்களை ஒரு டாக்டர் மயக்க ஊசி போடாமல் எடுக்கவேண்டியிருந்தது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமலை மாவட்டத்தில் 300க்கு மேல் மக்கள் பலியாகியுள்ளனர்

## அங்கு சென்று திரும்பிய எம். பி. கூறுகிறார்

(அன்டன் எட்வேர்ட்)

திருகோணமலை மாவட்டத்தில் இது வரை 300க்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர் என்று அப்பகுதி மக்கள் தங்களுக்கு கூறியதாக, அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவுடன் திருமலைக்கு விஜயம் செய்துவிட்டு, கொழும்பு திரும்பியுள்ள ரெலோ பிரமுகர் கே. சிவாஜிலிங்கமும், ஜே. திவ்வியநாதன் எம். பி. யும் தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம், கிரியாய் காடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள், பீதி காரணமாக சென்றுள்ளனர் என்றும், தங்களுக்கு தகவல் தரப்பட்டதாக இவர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை, வவுனியா முதலான இடங்களுக்குச் சென்று திரும்பிய அவர்கள் அங்குள்ள நிலைமை பற்றி விபரிக்கையில் மேலும் கூறியதாவது:-

திருகோணமலையில் பொது மக்களைச் சந்தித்துப் பேசிய போது அப்பாவி மக்கள் முந்நூறிற்கும் மேற்பட்டவர்கள் இறந்திருப்பதாக தகவல் தந்தனர். நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் உள்ளன.

நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கேற்பட்ட சொத்து இழப்புக்களைப் பற்றி முறையீடு செய்ய திருமலை பொலிஸ் நிலையத்திற்கு வந்திருந்தனர்.

தம்பலகாமம், கிரியாய் காடுகளிலும் பலர் பாதுகாப்புத் தேடிச் சென்றுள்ளனர்.

### வவுனியாவில்

வவுனியாவிற்கு சென்ற பொழுது அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணவைச் சந்திக்க பிரஜைகள் குழுவினர் வந்திருந்தனர்.

வவுனியா ஆஸ்பத்திரியில் தற்போது கட்டடம் மட்டும் தான் உள்ளதாகவும் டாக்டர்களோ, நோயாளிகளோ இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சுமார் 50 அப்பாவி மக்கள் வரை அங்கு இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம், வவுனியாவிற்கு இடையிலான பஸ் சேவையினையும் கொழும்பு, கோட்டைக்கும் வவுனியாவிற்கும் இடையிலான புயில் சேவையையும் மேற்கொள்ளுமாறு அமைச்சரிடம் பிரஜைகள் குழுவினர் வலியுறுத்திக் கேட்டுள்ளனர்.

# வட-கிழக்கு மோதலில் 419 புலிகள் 5 பொதுமக்கள் பலி

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

(எம்.பி.எம். அஸ்ஹர்)

வடக்கு—கிழக்கு மோதலில் 310 இராணுவ, பொலிஸ் வீரர்களும் 5 பொது மக்களும், 419 புலிகளும் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சிறில் ரணதுங்க நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டிடத்தில் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர் 152 படை வீரர்களும், 158 பொலிஸாரும், ஐந்து பொது மக்களும், 419 புலிகளும் கொல்லப்பட்டனர். 346 இராணுவத்தினரும், 12 பொலிஸாரும், 8 பொது மக்களும் 340 புலிகளும் காயமடைந்துள்ளனர் என்றும் விபரித்தார்.

விடுதலைப் புலிகள் எட்டு பாலங்களையும், மதகுகளையும் உடைத்துள்ளனர். கலுவாஞ்சிக்குடி பாலம் படையினரால் திருத்தப்பட்டுள்ளது எனக் கூறிய திரு. சிறில் ரணதுங்க விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடி போன்றவற்றுக்குப் பயந்து அகதிகளாக இருப்போர் சொந்த வீடுகளுக்குச் செல்ல அஞ்சுவதாகவும் கூறினார்.

# வடக்கு - கிழக்கு மாகாணசபை கலைப்பினால் மேலும் அனர்த்தங்கள் விளையும்

## ஈ. என். டி. எல். எப். கண்டனம்

(அன்டன் எட்வேர்ட்)

'வடக்கு-கிழக்குமாகாண சபை கலைப்பு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிரானது' என ஈ. என். டி. எல். எப். கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈ. என். டி. எல். எப். இன் சார்பில் முன்னாள் வட-கிழக்குமாகாண அமைச்சரான மனோ மாஸ்டர் இது தொடர்பாக நேற்று அறிக்கையொன்றை விடுத்தார்.

'மாகாண சபையில் இடம்பெறாதவர்களின் (விடுதலைப் புலிகள்) கோரிக்கையின் பேரில் அரசாங்கம் மாகாண சபையைக் கலைத்துள்ளது. இனிமேல் அங்கு ஆளுநர் ஆட்சியே நடைபெறும். வடக்கு-கிழக்கின் நிர்வாகத்தை இராணுவம் மேற்பார்வை செய்யும் நிலைதான் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையானது மேலும் அனர்த்தங்களை ஏற்படுத்தும்' என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

'விடுதலைப் புலிகள் இது வரை சாதித்தது என்ன? தமக்கு எதிரானவர்களை கொலை செய்தார்கள். உரிமையுடன் வாழக்கூடிய நிலைமை தமிழினத்துக்கு ஏற்பட்ட போது, அதனை விடுத்து தமிழினத்தை அழிவுப் பாதைக்கு தள்ளிவிட்டனர். விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியில் அந்நியப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் வட-கிழக்கு மாகாண சபையை மீண்டும் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு ஈ. என். டி. எல். எப். தெரிவித்துள்ளது.

# பேராதனை வளாக தமிழ் ஊழியர் இருவரை காணவில்லை

## இருவரும் மட்டு. வாலிபர்களாம் தகவல் அறிய காசிநாதர் எம். பி. முயற்சி

நிந்தவூர்,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பேராதனையிலிருந்து கண்டிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற மட்டக்களப்பைச் சேர்ந்த இரு தமிழ் வாலிபர்களைக் காணவில்லை என்றும், அவர்கள் பற்றி பல இடங்களில் விசாரித்தும் தகவல் பெற முடியாதிருப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. பிரின்ஸ்காசிநாதர் 'கேசரி'க்குத் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் மகனான அஜித்தேவதாஸ் (25 வயது), மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த இந்து ஆலய பூசகரின் புதல்வரான சிவானந்தன் (25 வயது) ஆகிய இருவரும் தம்முடன் பணிபுரிபவரின் பிள்ளையின் திருமண வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் பேராதனையிலிருந்து கண்டிக்குச் செல்லும் வேளையில் காணாமல் போயுள்ளதாக திரு. பிரின்ஸ் காசிநாதர் தெரிவித்தார்.

கடந்த 24ஆம் திகதி ஞாயிறன்று இரவு 9.30 மணியளவில் புறப்பட்டதாகவும் அதே இரவு பேராதனை பகுதியில் படையினர் சுற்றிவளைப்பொன்றினைச் செய்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இது பற்றி தகவல் கிடைத்ததையடுத்து கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. கிரியெல்ல, திரு. துனுவில ஆகியோருக்கு தான் தெரியப்படுத்தியதாகவும் அவர்கள் கண்டி பொலிஸ் அதிபர் திரு. உடுகம்பொலவிடம் தகவல் கொடுத்து பல பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டும் தகவல் பெற முடியாமல் போய்விட்டதாகவும் பிரின்ஸ் காசிநாதர் எம். பி. தெரிவித்தார்.

தமிழ தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னைப் படுகொலைகளால்

# தமிழக அரசின் தர்மசங்கட நிலை!

(நமது சென்னை நிருபர்)

தமிழீழப் போராட்டத்துக்கு தமிழகத்தில் நிலவிய கொஞ்சநஞ்ச ஆதரவையும் சமீபத்திய சென்னைப் படுகொலைகள் துடைத்தெறிந்து விட்டது போலத் தோன்றுகிறது. தமிழக மக்களின் கோபம் ஒட்டுமொத்தமாக தமிழக அரசின் மீதே திரும்பியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நடந்துகொள்வதாக தமிழக மக்கள் மத்தியில் நிலவிய எண்ணம் இப்போது மத்திய அரசையும் தொற்றிக் கொண்டுவிட்டது. அதன் விளைவாக சென்னைப்படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை தமிழக அரசிடம் மட்டுமே விட்டுவிட விரும்பாமல் அது தனது புலனாய்வுத்துறையினரையும் இந்த விசாரணைகளில் நுழைத்து விட்டிருக்கிறது.

சென்னையில் ஈழப் போராளிகளால் கடந்த காலத்தில் எத்தனையோ அனர்த்தங்கள் விளைந்திருந்தாலும் மத்திய அரசு அந்த சம்பவங்களை விசாரிக்கும் பொறுப்பை தமிழக அரசிடமே விட்டுவிட்டிருந்தது.

ஆனால் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எப்.) பொதுச்செயலாளர் பத்மநாபா உள்ளிட்ட 15 பேரது படுகொலை பற்றிய சேதி அறிந்தும் மத்திய புலனாய்வுத்துறை உயரதிகாரியே சென்னைக்குவந்துவிட்டார்.

சென்னைப் படுகொலைகள் தமிழக அரசுக்கும் பெரும் நெருக்கடியையும் தர்மசங்கட நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவாவது முதலமைச்சர் கருணாநிதி கடுமையாக நடந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஈழ விடுதலைப் புலிகளும் இல்லை அவர்களது முகாம்களும் கிடையாது என முதலமைச்சர் கூறிவந்தவரை பொலிஸ் அதிகாரிகளும் அதையே கிளிப்பிள்ளைமாதிரி திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தனர். இப்போது சென்னைப் படுகொலைகள் ஈழப் புலிகளின் கைவரிசையாக இருக்கலாம் என முதலமைச்சர் கோடிட்டுக் காட்டியிருப்பதால் பொலிசார் எச்சரிக்கையாகியுள்ளனர்.

ஈழப் போராளிகள் அவர்களது முகாம்கள், அலுவலகங்கள் நடமாட்டங்கள், தொடர்புகள். செய்த காரியங்கள் அனைத்தும் தமிழகப் பொலிசாருக்கு அத்துபடியான விசயம். அரசியல்வாதிகளால் அவர்களின் கரங்கள் கட்டுப்பட்டிருந்தன. இப்போது கடந்த சில தினங்களாக அவர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

சென்னையில் பத்மநாபாவையும் அவரது சகாக்களையும் கொன்றது ஈழப் புலிகள்தான் என்பதில் பொலிசாருக்கும் உறுதியான நம்பிக்கை உள்ளது. கொலையாளிகளில் சிலர் படுகொலை நடந்த சில மணி நேரத்தில் சென்னைக்கருகே மாமல்லபுரம் கடலூருக்கு இடைப்பட்ட கடல்கரையிலிருந்து அதிநவீன விசைப்படகுகள் மூலம் யாழ்ப்பாணத்துக்குத் தப்பிவிட்டனர். வேறு சிலர் சென்னையிலிருந்து முன்னூறு மைல்களுக்கு அப்பால் தஞ்சாவூர் பகுதியில் உள்ள வேதாரண்யம் கடற்கரைப்பகுதிக்குச் சென்று, அங்கிருந்து கொலைகள் நடந்த மூன்று தினங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணம் சென்றுள்ளனர் என உளவுத்துறைபொலிஸார் கூறுகின்றனர்.

தஞ்சாவூர் அதிராமபட்டினம் பகுதியில் உள்ள கடற்கரை ஓர கிராமமான மல்லிப்பட்டணம் நீண்டகாலமாகவே ஈழப்புலிகளின் கோட்டையாக விளங்கி வந்துள்ளது ஒன்றும் ரகசியமல்ல. இந்த கிராமத்தில் உள்ள சுப்பையாபிள்ளை என்பவரது 15 ஏக்கர் தென்னந் தோப்பை ஈழப்புலிகள் நீண்டகாலமாக தங்கள் குத்தகைக் காணியாக பயன்படுத்தி வந்தனர் என பொலிசார் கூறினர்.

சென்னைப் படுகொலையின்போது பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வெள்ளைநிற மாருதி வேன் இந்தத் தோப்பில் வைக்கோல்களால் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் வியாழனன்று மீட்கப்பட்டது. வேன் கைப்பற்றப்பட்ட பிறகு கொலையாளிகள் இலங்கைக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற ஊகம் உறுதியாகிவிட்டது.

என்றாலும் கொலையாளிகள் இன்னார் எனத் தெரிந்தால், அல்லது அதற்கான சந்தேகத்துக்குரிய தடயங்கள், கிடைத்தால் அவர்களைக் கைதுசெய்வது சிரமமல்ல என பொலிஸ் உயரதிகாரிகள் கூறினர்.

த. வி. கூட்டணி கோரிக்கை

# யுத்த நிறுத்தம் உடனடியாக கொண்டுவரப்படவேண்டும்!

## கண்காணிக்க ஐ.நா., காமன்வெல்த் சமாதானப் படை தேவை

(கேசரி நிருபர்)

வடக்கு-கிழக்கு மோதலை நிறுத்த உடனடியாக யுத்தநிறுத்தம் கொண்டுவரப்படவேண்டும். அதேவேளை இதைக்கண்காணிப்பதற்கு ஐ. நா. படை, அல்லது காமன்வெல்த் சமாதான படையை அழைக்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியுள்ளது.

தற்போதைய மோதல் சம்பவத்தினால் ஏற்பட்டிருக்கும், உயிரிழப்புகள் பாதிப்புக்கள் குறித்து கூட்டணி கவலை தெரிவித்து அறிக்கையொன்றை விடுத்திருக்கிறது.

கூட்டணியில் மத்திய கமிட்டியின் சார்பாக திரு. மாவை சேனாதிராஜா எம். பி. விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மோதல் இடம்பெற்ற நாளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள் அனுப்பிவைக்கப்படவில்லை என்பதை அறிந்து கவலையடைகிறோம். அதேவேளை ஜெனிவா உடன்பாட்டுக்கு முரணானவகையில் யுத்த கைதிகள் கொல்லப்பட்டிருப்பதாக கிடைத்திருக்கும் செய்திகளும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளன.

ஆத்திரமூட்டக்கூடிய பேச்சுக்களும் செய்தி அறிக்கைகளும் சிறுபான்மை மக்கள் மத்தியில் பாதுகாப்பு அற்றதன்மையை தோற்றுவிப்பதுடன் தேசிய ஐக்கியத்துக்கு ஊறுவிளைவிப்பதாகவும் அமைந்துள்ளது.

* மோதலில் ஈடுபட்ட தரப்பினர் ஜெனிவா உடன்படிக்கைக்கு அமைய யுத்த கைதிகளின் உரிமையை பாதுகாக்கும் அதேவேளை சிவிலியன்கள் மீதான உயிரிழப்புகள், காயங்களை தவிர்க்குமாறு வேண்டுகிறோம்.

* பாதிப்புற்ற பகுதிகளில் காயமுற்ற மக்களுக்கு உணவு, மருத்துவவசதிகளை உடனடியாக வழங்கவேண்டுகிறோம்.

* இனஐக்கியம் குலையாத வகையில் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு சகல தரப்பினரையும் வேண்டுகிறோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தத்தை நிறுத்துங்கள்

## அரசு - புலிகளுக்கு

## ஈ.பி. ஆர். எல். எப். கோரிக்கை

[அன்டன் எட்வேர்ட்]

தமிழ் மக்களை அழிவுகளில் இருந்து காப்பாற்ற முகமாக அரசும் – விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்துக்கு வரவேண்டுமென்று ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தின் செயலாளர் நாயகம் திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் எம். பி. விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கை வருமாறு:—

எமது நாட்டின் நன்மைகளுக்குப் புறம்பான ஓர் யுத்தத்தினை நடத்தி, அதற்காக சகல செல்வங்களையும் வழங்குமாறு தேசம் மீண்டும் ஒருமுறை நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

வடக்கு–கிழக்கில் இரத்த ஆறு ஓடுகின்றது. தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வு மிகவும் மோசமானதும் அபாயகரமானதுமான சவால்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. வடக்கு — கிழக்கு மட்டுமல்லாத நாடு முழுவதிலும் உள்ள தமிழ் பேசும் மக்கள் அவர்களது தேசிய நலன்களை புறக்கணிக்கும் சக்திகளின் கைப்பிடிக்குள் சிக்கியிருக்கின்றார்கள்.

அரசும், புலிகளும் வடக்கு – கிழக்கு மாகாண மக்களின் கிர்ப்பை மதித்திருப்பார்களேயானால் இந்த யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கும் தமிழர், முஸ்லிம், சிங்களவர், பாதுகாப்புப் படையினர் [illegible]ளவில்லாத துன்ப துயரங்களை தவிர்த்திருக்கலாம்.

பல இன மக்களினால் உருவாக்கப்பட்டுள்ள நமது சமூக அமைப்பு இனப் படு கொலைகளாலும், பாரிய அழிவுகளாலும் நாசமாக்கக் கூடிய காரணிகளை இந்த யுத்தம் உள்ளடக்கியிருக்கின்றது என்பதை சகலரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளேயே பிரச்சினைகளுக்கான தீர்வை விரும்புகின்றது. தமிழ் பேசும் மக்களின் யாராலும் பறித்தெடுக்க முடியாத தேசிய உரிமைகளை ஸ்தாபிப்பது என்ற நோக்கத்தினை அடைவதற்காக அரசும், புலிகளும் சண்டையை நிறுத்தி நாம் அரசுக்கு சமர்ப்பித்திருக்கும் 19 அம்சங்கள் அடங்கிய வேலைத் திட்டத்தின் அடிப்படையில் சகல தமிழ் அமைப்புக்களுடனும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தேசிய ஐக்கியத்தினையும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையினையும் ஒன்றாக அடைவதற்கு 19 அம்ச திட்டத்தின் அடிப்படையில் மனம் திறந்த கூர்மையான அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். யுத்தத்தை நிறுத்தி ஆயுதங்களற்ற சமாதானத்தை ஸ்தாபித்த சமாதான கலந்துரையாடலுக்கான நிலைமைகளை உருவாக்கி வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கு அதிகார பகிர்ந்தளிப்பை பெற வைப்பதே நம் எல்லோரினதும் கூட்டுப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

---

# கந்தளாயில்

# 40 ஆயிரம் முஸ்லிம் அகதிகள் அடிப்படை வசதிகள் இல்லை

## திருமலை எம். பி. தகவல்

(நமது நிருபர்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து வெளியேறி கந்தளாய்க்கு வந்துள்ள சுமார் 40 ஆயிரம் முஸ்லிம்கள் உணவு மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி பரிதாபகரமான நிலையில் காணப்படுவதாக திருகோணமலை மாவட்ட எம். பி. எம். கே.டி. எஸ். குணவர்தன வியாழனன்று தெரிவித்தார்.

கந்தளாய்க்கு வந்துள்ள முஸ்லிம்களது நிலை குறித்து சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுவை பாராளுமன்றத்தில் சந்தித்து விளக்கியதாகவும் குணவர்தன எம். பி. கூறினார்.

முஸ்லிம்களது கலாசார பழக்க வழக்கங்கள் தனியானவை. இந்நிலையில் முஸ்லிம் பெண்கள் அகதிகளாக வந்து படும் பாடு வேதனைக்குரியதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

# கல்முனையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட 200 பேரும் எங்கே?

## தகவலறிய முடியாது உறவினர் அவ

## விபரம் வெளியிடுமாறு கோருகிறார்

## பிரின்ஸ் காசிநாதர் எம். பி.

நிந்தவூர்;

மட்டக்களப்பு நகரில் பாதுகாப்புப் படையினர் பொதுமக்களுக்கு பாதகம் விளைவிக்காத வகையில் புரியும் சேவைகளை பாராட்டியும் அதேவேளை மட்டக்களப்பு நகருக்கு அப்பால் பல இடங்களில் பாதுகாப்புப் படையினர் பல இன்னல்களை ஏற்படுத்தியுள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. பிரின்ஸ் காசிநாதர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னவுக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் விதந்துரைத்துள்ளார்.

'மட்டக்களப்பு நகரில் படையினர் பொதுமக்களுக்கு தீங்கிழைக்காத வகையில் நடந்து கொள்வதாக அங்குள்ள மக்கள் தகவல் தந்திருக்கின்றனர். அதை பாராட்டுகிறேன். ஆனால் மட்டக்களப்பு நகருக்கு அப்பாலுள்ள பெரிய போரதீவு, முனைத்தீவு கிராமங்களில் பட்டிருப்புப் பாலம் விடுதலைப் புலிகளால் உடைக்கப்பட்டு மறு கல மணித்தியாலங்களில் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன' என்று திரு. பிரின்ஸ் காசிநாதர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கல்முனை, காரைதீவு பகுதிகளில் சுற்றி வளைப்பின் போது அழைத்துச் செல்லப்பட்ட அநேகர் பற்றிய தகவல் அறிய முடியாமல் பெற்றோர் பரிதவிக்கின்றனர்.

கொழும்பு சென். தோமஸ் கல்லூரி ஆசிரியரான ஜொலி என்பவர் அவரின் தம்பி சகிதம் மருமகனின் பிறந்த நாளுக்காக கல்முனை சென்ற போது படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு அவரின் தம்பி மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளார். கல்முனையைச் சேர்ந்த 50 வயதுடைய மஜூரில் நுட்ப உதவியாளர் முத்துலிங்கம் சேகரதாசன் என்பவரும் சுற்றிவளைப்பில் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சுமார் 200 பேர் வரையில் அப்பகுதியால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் பற்றி தகவல் பெறமுடியாமலிருக்கின்றது. இவர்களைப் பற்றி தகவல் அறிய உடன் வழி செய்யவும்.

ஒவ்வொரு பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள சமாதானக் குழுக்களுடன் பாதுகாப்புப் படையினர் ஒத்துழைப்பதில்லை எனவும் எனக்கு புகார் கிடைத்துள்ளது. இதனால் மட்டக்களப்பு சமாதான குழுத் தலைவர் திரு. தங்கவடிவேல் இராஜினாமா செய்துள்ளார்.

சகல பகுதிகளிலும் சுற்றி வளைப்பில் கைது செய்யப்படுவோர் பற்றி தகவல் நிலையங்கள் அமைத்து விபரம் வெளியிடப்படுமென்ற உங்களின் வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்விதம் கொண்டு செல்லப்படுபவர்களைப் பற்றி தகவல் தெரிந்து கொள்வதற்காக அல்லற்படும் மக்களின் துயரைத் தீர்க்க தகவல் நிலையங்களை உடன் ஏற்படுத்தவும். தகவல் நிலையங்களை ஏற்படுத்தும் போது பொது மக்களுடன் நன்கு பழகக்கூடிய உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும்.

சுற்றி வளைப்பில் கொண்டு செல்லப்பட்டோரில் ரிசேர்வ் பொலிஸாராக கடமை புரிந்த தமிழ் வாலிபர்களும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

www.tamilarangam.net



பள்ளி நாட்களிலிருந்து படுகொலை வரை...

# பத்மநாபா



கொலையுண்ட பத்மநாபா பள்ளி நாட்களிலிருந்தே புரட்சிகரமான செயல்களில் ஈடுபட்டவர். இலங்கை அரசு அப்போதெல்லாம் 'தர நிர்ணயக் கல்வி முறை'யை வைத்திருந்தது. அதாவது, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் படிப்புக்கு ஒரு தமிழ் மாணவன் சேர விரும்பினால், அவன் பள்ளி இறுதியாண்டில் குறைந்தபட்சம் எண்பத்தைந்து சதவிகித மார்க்குகள் எடுத்திருக்க வேண்டும். அதே நேரத்தில், சிங்கள மாணவர் ஐம்பது சதவிகித மதிப்பெண் எடுத்திருந்தாலே போதும்... டாக்டர் படிப்புக்கு ஸீட் கிடைத்துவிடும்.

இந்த முறையை எதிர்த்து பத்மநாபா 'தமிழ் மாணவர் பேரவை' என்ற ஒன்றை எழுபதுகளில் துவக்கினார். இதனால் இலங்கை அரசு, மாணவன் பத்மநாபாவைக் கைது செய்து சிறையில் வைத்தது. வருடத்தில் பல நாட்களைச் சிறையிலேயே கழித்தார் பத்மநாபா.

பிள்ளையின் போக்கு பத்மநாபாவின் பெற்றோருக்குப் பயத்தை ஏற்படுத்தியது. நாட்டின் சில மூலைகளில் அரசுக்கெதிரான போராட்டம் பற்றிய முணுமுணுப்புகள் எழுந்த சமயம் அது..! மகன் இலங்கையில் இருந்தால் பிரச்னை என்று மேற்படிப்புக்காக பத்மநாபாவை லண்டனுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில்தான் லண்டனில் 'ஈழப்புரட்சி அமைப்பாளர்கள்' என்ற இயக்கத்தை ஈ.ஆர்.ரத்னசபாபதி என்பவர் நடத்தி வந்தார். 'ஈரோஸ்' (Eelam Revolutionary Organizers) என்று பெயரிடப்பட்டிருந்த அந்த அமைப்பில் மார்க்சியவாதியான ரத்னசபாபதி, ஒரு இயக்கத்தை நடத்திச் செல்லும் பயிற்சியைப் போராளிகளுக்குக் கற்றுக் கொடுக்கும் அமைப்பாக நடத்தி வந்தார். அந்த அமைப்பின் மூலமாகத்தான் பத்மநாபா லெபனானுக்குச் சென்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றார். இப்போதைய 'ஈரோஸ்' (ஈழ மாணவர் புரட்சி இயக்கம்) இயக்கத்தின் தலைவர் பாலகுமார்கூட ரத்னசபாபதியின் பயிற்சிக் களத்தில் உருவானவர்தான்!

லெபனானில் பெற்ற பயிற்சிக்குப் பிறகு சென்னை திரும்பிய பத்மநாபா ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில் வந்திறங்கிய இலங்கை அகதிகளின் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபட்டார். அதற்குப் பிறகு 78-ம் வருடம் இலங்கையில் கிழக்கு மாகாணப்பகுதி கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது அங்கே சென்று தங்கி உதவிகள் செய்து கொண்டிருந்தார். இழந்த வீடுகளைப் புதுப்பித்துத் தந்ததிலும், மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கியதிலும் இந்த மாணவர் அமைப்புக்குப் பெரும் பங்கு உண்டு! இந்த அமைப்பில் முக்கியமானவர் பத்மநாபா.

இதற்குப் பிறகு ஈழப் புரட்சியாளர்கள் அமைப்பு 1981-ல் 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' என்றானபோது, அதன் செயலாளராக (செக்ரெடரி-ஜெனரல்) தேர்வு செய்யப்பட்டார் பத்மநாபா.

இதற்குச் சில வருடங்களுக்கு முன்பு சென்னையில் தங்கிப் படிக்க வந்த ஈழ மாணவர்கள் சிலருடன் சேர்ந்து சென்னை சூளைமேட்டில் தங்கியிருந்தார் பத்மநாபா. அப்போதுதான் தன் வருங்கால மனைவி ஆனந்தியைச் சந்தித்தார்.

ஆனந்தி அப்போது கல்லூரி மாணவி. பத்மநாபா குடியிருந்த வீட்டுக்கு எதிரே இருந்தது ஆனந்தியின் வீடு. அப்போது சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கஷ்டப்பட்ட பத்மநாபா குழுவினருக்கு ஆனந்தியின் குடும்பம்தான் அன்னமிட்டது.

குடும்ப நண்பர் பத்மநாபாவுடன் ஆனந்தி காதல் கொண்டார். தன் விருப்பத்தை ஆனந்தி தெரிவித்தார். பத்மநாபாவுக்கு ஆனந்தி மீது அன்பிருந்தாலும், திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை.

"போராளியின் வாழ்க்கை எப்போது முடியுமென்று தெரியாது! இதில் வாழ்க்கைத் துணைவியாக ஒரு பெண்ணை மணந்து கொண்டு அவளைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவானேன்?" என்பதுதான் பத்மநாபாவின் அப்போதைய வாதம்!

தொடர்ச்சி 15-ம் பக்கம்...



## போலீஸ் சொல்வதெல்லாம் வெறும் கண் துடைப்புதான்!

இலங்கைப் போராளி இயக்கங்களில் முன்பு சிறீ சபாரத்தினம் தலைமையிலிருந்த 'டெலோ', உமா மகேஸ்வரன் தலைமையிலான 'பிளாட்' ஆகியவற்றுடன்தான் புலிகளுக்குக் கருத்து வேறுபாடு! பின்னர் சபாரத்தினம் விடுதலைப்புலிகளால் பலியானார். விடுதலைப்புலிகள் மிதவாதியான அமிர்தலிங்கத்தையும் சுட்டுக் கொன்றார்கள்.

இவையெல்லாம் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள். ஆனால், இதுவரை விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் எந்தவிதமான வன்முறைச் செயல்களிலும் ஈடுபடாமல் இருந்தனர். 'சென்னையில் நடந்த கொலைகள் சில அரசியல் காரணங்களினால்தான்' என்று இலங்கை விவகாரத்தின் அரசியல் பார்வையாளர்கள் சொல்கிறார்கள்.

இலங்கையில் தற்போது நடைபெறும் போரில் விடுதலைப்புலிகளை முழுவதுமாக அடக்கிவிட்டு, அங்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப்-பை ஆட்சிப் பீடம் ஏற்ற இலங்கை அரசு திட்டமிட்டதாம்!

தற்போது நடைபெறும் போரில் விடுதலைப்புலிகளை முறியடிக்க, அவர்களைப் பற்றிய ரகசியங்கள், மறைவிடங்கள், பதுங்கும் பகுதிகள் குறித்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். இலங்கை அரசுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்ததாம்! இதுவே சமீபத்திய படுகொலைகளுக்குக் காரணம் என்கிறார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்கு இலங்கை அரசு எப்போதுமே தனி முக்கியத்துவம் கொடுத்து வந்தது என்பது நிச்சயமான உண்மை!

சென்னையில் பத்மநாபா உட்பட பதினைந்து பேரைக் கொலை செய்த விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களது அடையாளம் தற்போது தெரிய வந்துள்ளதாக போலீஸ் தரப்புச் செய்தி! அவர்களில் விடுதலைப்புலி சுகுந்தன் என்பவரும் ஒருவராம்! மற்றவர்களது அடையாளம் குறித்தும் ஒரு சில குறிப்புகளைச் சம்பவத்தை நேரில் பார்த்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் போலீஸாரிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். போராளிகளே போலீஸிடம் கொடுத்திருக்கும் வாக்குமூலம்...

"முதலில் காரிலிருந்து இறங்கிய நான்கு பேர் பத்மநாபா தங்கியிருக்கும் மாடிப் பகுதிக்குச் சென்றனர். அவர்கள் வேறு யார் வீட்டுக்கோ செல்கிறார்கள் என்றுதான் முதலில் நாங்கள் நினைத்தோம். இத்தனை பேர் தெருவில் கூடியிருந்தும், எங்களுக்குத் தெரியாமலேயே அவர்கள் துப்பாக்கிகளை மறைத்துக் கொண்டு மேலே போயிருக்கிறார்கள். சிறிது நேரத்தில் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டு நாங்கள் விழுந்தடித்துக் கொண்டு அபார்ட்மெண்டுக்குள் நுழைந்தோம், அப்போது அம்பாஸடர் காரில் இருந்த மேலும் இரண்டு பேர் எங்களை நோக்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். எங்களில் சிலர் கீழே விழ.... மேலும் சிலர் எதிர் அபார்ட்மெண்டுக்குள் நுழைந்து தப்பித்தோம். அங்கிருந்து கொண்டுதான் அவர்களை அடையாளம் கண்டுபிடித்தோம். அனைவரும் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள்!" என்றபடி அந்த வாக்குமூலம் நீளுகிறது.

"கொலையாளிகள் தப்பிச் சென்றதாகக் கூறப்பட்டுவரும் செய்தியில்கூடப் பல மர்மங்கள் உள்ளன. ஏகே-47 ரகத் துப்பாக்கி ஒன்று நுங்கம்பாக்கம் ரயில்நிலையம் அருகே போடப்பட்டுள்ளது. சம்பவத்தன்று இரவே துப்பாக்கிகளுடன் சென்ற வெள்ளை அம்பாஸடர் காரை கேளம்பாக்கம் பழைய மகாபலிபுரம் சாலையில் பார்த்ததாக போலீஸார் கூறுகின்றனர். அதே தினத்தில், விழுப்புரத்தில் ஒரு மாருதி காரைப் பறித்துக் கொண்டு கொலையாளிகள் தப்பியிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லப்படும் பல செய்திகளில் ஒன்றுக்கொன்று ஏதேனும் சம்பந்தம் உண்டா?" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். போராளிகள் கேட்கிறார்கள்.

இந்தக் கொலையாளிகளைக் கண்டுபிடிப்பது குறித்து போலீஸ் எத்தனை தூரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முயன்றார் ஜூ.போ. நிருபர்.

"கொலை செய்யப்பட்டவர்களைப் பிரேதப் பரிசோதனை செய்து ஊர்வலமாகச் சென்று அடக்கம் செய்த பின்னர் இந்த வழக்கும் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது!" என்றார் ஒரு போலீஸ் அதிகாரி நிருபரிடம்.

இப்போது அரசைப் பொறுத்தமட்டிலும் இந்தப் படுகொலைகள் எப்படி நடந்தன, ஏன் நடந்தன போன்ற ஆராய்ச்சிகளோடு சரி! அதையும் விஷயத்தைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் மட்டுமே செய்கிறார்கள். மற்றபடி, இனி விடுதலைப்புலிகள் தமிழகத்துக்கு வருவது தடுக்கப்படும் என்று போலீஸார் சொல்வதெல்லாம் வெறும் கண்துடைப்புதான்!

மேலும், இலங்கையில் இப்போது நடைபெற்றுவரும் போரில் படுகாயமடையும் விடுதலைப்புலிகள் சிகிச்சைக்காக இந்திய எல்லைக்குள் நுழைந்தே ஆக வேண்டும். அப்போது இந்த விஷயத்தில் போலீஸ் என்ன செய்யப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

— கணபத்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5-ம் பக்கத் தொடர்ச்சி...

# பத்மநாபா

ஆனால், ஆனந்தி பிடிவாதமாக இருந்தார். பல வருடங்களாகியும் ஆனந்தி தன்து காதலில் உறுதியாக இருந்தது கண்டு பத்மநாபாவின் நண்பர்கள் உருகிப்போனார்கள்.

'இருபத்துநான்கு மணி நேரமும் வேலையில் மூழ்கிப் போய், வேளாவேளைக்குச் சாப்பிடாமல் அசட்டையாக இருக்கும் பத்மநாபா, ஆனந்தியை மணந்தால் ஒரு வேளையாவது ஒழுங்காகச் சாப்பிடுவார்' என்பது நண்பர்களின் எண்ணம்!

பத்மநாபாவை வற்புறுத்தி ஆனந்தியை மணக்கச் செய்தார்கள். ஆனந்தியிடம் ஒரு போராளியின் வாழ்க்கை முறை பற்றித் தெளிவாகப் பேசி, அவரை எதற்கும் தயார்ப்படுத்தியே வைத்திருந்தார் பத்மநாபா.

தங்கள் போராட்டத்தையும் வாழ்க்கை முறையையும் ஆனந்தி அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று, அவருக்கு யுத்த பூமியைச் சுற்றிக் காட்டினார் பத்மநாபா.

இப்போது காதற்கணவன் பத்மநாபாவின் படுகொலை ஆனந்தியை வெகுவாகப் பாதித்துவிட்டது. கொலை நடந்து கிட்டத்தட்ட ஒரு வார காலம் முடிந்துவிட்ட பிறகும் ஆனந்தி இன்னும் ஒரு வேளைகூடச் சாப்பிடவே இல்லை. அடிக்கடி நினைவிழக்கும் ஆனந்திக்குக் கோடம்பாக்கம் மருத்துவமனை ஒன்றில் 'சலைன்' ஏற்றப்பட்டு வருகிறது.

ஆனந்தி [illegible] துயரத்தோடு அவரருகில் இருக்கிறார்கள். போலீஸோ பத்திரிகையாளர்களோ ஆனந்தியுடன் பேசுவதை அவர்கள் விரும்பவில்லை.

ஆனந்தி-பத்மநாபாவின் திருமணம் பற்றி நிருபர்கள் கேட்டால், "பொண்ணுன்னா கல்யாணம் நடக்கத்தான் செய்யும்... முடிஞ்சுபோன சப்ஜெக்டைப் பத்தி இப்ப என்ன பேச்சு? தயவுசெஞ்சு போயிடுங்க!" என்று சொல்லிக் கதவைப் பட்டென்று சாத்தி, வேதனைக்குத் திரை போடுகிறார்கள் உறவினர்கள்!

— எஸ். சுபா

பத்மநாபா மறைவுக்குப் பிறகு சென்னை – தி.நகர், தண்டபாணி தெருவில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகம் எப்போதும் மனித நடமாட்டத்துடன் காட்சியளிக்கிறது.

ஏற்கெனவே தமிழக போலீஸாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள சில ஈ.பி.ஆர்.எல்.எஃப். போராளிகளின் இல்லப் பெண்கள்; தங்களது வீட்டு ஆண் மக்களின் நிலவரம் அறிய அங்கே வந்திருந்தார்கள். இங்கும் பலத்த போலீஸ் காவல்!

சில போராளிகளுடன் ஜூ.போ. நிருபர் பேச்சுக் கொடுத்தபோது, நீண்ட யோசனைக்குப் பிறகே அவர்கள் வாயைத் திறந்தார்கள். 'சுட்டவனையும் பிடி! சுடப்பட்டவனையும் பிடி' என்ற தமிழக அரசின் உத்தரவினால் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார்கள் இந்தப் போராளிகள்.

"இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்த பிறகு புலிகள் இந்திய ராணுவ வீரர்களை நாய்கள் என்றுகூடப் பழித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், என்றுமே நாங்கள் அப்படி இந்தியாவை ஏசியதில்லை. இந்திய போலீஸாரை ஏய்த்ததுமில்லை. இன்றுவரை எங்கள் இயக்கம் இந்திய அரசு சொன்ன எந்தக் கட்டளையையும் மீறியதில்லை. இந்தியா என்றுமே எங்களுக்கு நட்பான நாடுதான்!

பத்மநாபா 18-ம் தேதி இரவு 7 மணிக்குத்தான் சென்னை வந்தார். அவர் வந்த செய்தி எல்.டி.டி.ஈ-யினருக்குத் தெரிந்த 24 மணி நேரத்தில் இந்தப் படுகொலைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதில் ரகசியப் புலனாய்வுத்துறை போலீஸார் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?!

இப்படிப்பட்ட பயங்கரமான தாக்குதலை எல்.டி.டி.ஈ-யினரால் மட்டுமே செய்ய முடியும். அதோடு, இதில் ஏதோ ஒரு தரப்பினரின் ஆதரவில்லாமல் அவர்கள் இந்தக் கொலைகளைச் செய்திருக்கவும் முடியாது.

பத்மநாபா வீட்டைக் கண்காணிக்கவே இருபத்துநான்கு மணி நேரமும் 'க்யூ' பிராஞ்ச் போலீஸார் அந்தப் பகுதியைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். இது இன்று நேற்று நடக்கிற விஷயமல்ல! ஆனால், சம்பவம் நடந்த அன்று பத்மநாபா சென்னைக்கு வந்த விவரமே தங்களுக்குத் தெரியாது என க்யூ பிராஞ்ச் சொல்லியிருப்பது உண்மையாக இருக்க முடியுமா? தமிழக க்யூ பிராஞ்சின் திறமையைக் குறைவாக மதிப்பிடுவதற்கு நாங்கள் ஒன்றும் அறியாதவர்கள் அல்ல!" என்றார் இன்னொரு போராளி!

"பத்மநாபா இலங்கை அரசுடன் தொடர்பு வைத்திருந்ததால்தான் அவரைப் புலிகள் சுட்டதாகச் சொல்கிறார்களே?" என ஜூ.போ. நிருபர் இழுத்ததும்...

"பத்மநாபா இலங்கை அரசின் ஏஜெண்டாக இருந்ததாகச் சொல்கிறீர்களா?! அப்படி இருந்திருந்தால் பத்மநாபா சென்னையில் வசிக்க வேண்டிய அவசியமே இல்லையே! இலங்கை ராணுவத்தின் பலத்த காவலுடன் யாழ்ப்பாண மாளிகை ஒன்றில் சகல வசதிகளுடன் இருந்திருப்பாரே!

இத்தனை செயல்களும் முயற்சிகளும் எதற்காக? எங்கள் மண்ணின் மைந்தர்கள் அங்கே பூரண சுதந்திரத்துடன் வாழத்தானே தவிர, எங்கள் சகோதரர்களைக் காட்டிக் கொடுத்து கேவலமான வாழ்க்கை நடத்துவதற்காக அல்ல" என்று ஆவேசமாகச் சொன்னார் ஒரு போராளி!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# படுவான்கரை காடுகளில் ஆகாய தாக்குதல்

## மட்டுநகர் வாவியில் சில சடலங்கள்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு பகுதியின் மேற்கே வாவிக்கு அப்பாலுள்ள படுவான்கரை பிரதேசத்தின் காட்டுப் புறங்களில் பாதுகாப்புப் படையினரின் ஆகாயமார்க்கமான தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியிலிருந்து இரண்டு விமானங்கள் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை பிற்பகல் 4 மணி வரை நடத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

படுவான்கரை பிரதேசம் வயல்களும், காடுகளும் நிறைந்த பரந்த பகுதியாயினும் மகிழவெட்டுவான், வாயித்தியமலை, உன்னிச்சை போன்ற கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. இத் தாக்குதல்களில் இந்த கிராமங்களில் வாழும்போது மக்கள் தரப்பில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாமெனவும் வீடுகள் சேதமடைந்திருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

நேற்றுக்காலையும் காலை 7 மணியிலிருந்து படுவான்கரை பிரதேசத்தில் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

### எரிந்த சடலங்கள்

இது இவ்விதமிருக்க, மட்டக்களப்பில் சின்ன ஆஸ்பத்திரி சந்தி, இ. போ. ச டிப்போ சந்தி, இருதயபுரம் ஆகிய இடங்களில் எரிந்த நிலையிலான ஒரு சில சடலங்கள் கிடக்கக் காணப்பட்டதாக மட்டக்களப்பு மக்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு வாவியிலும் சில சடலங்கள் மிதந்து சென்றதைக் கண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சம்பவங்களினால் மட்டக்களப்பு நகரிலும் நேற்று பதற்றமும், பீதியும் நிலவியது. மட்டக்களப்பிற்கு இரண்டு மைல் அப்பாலுள்ள மாமாங்கம், கூழாவடி கொலனி, மட்டிக்கழி ஆகிய பகுதிகளிலும் நேற்றுக்காலை இராணுவத்தினர் தேடுதல் நடத்தியுள்ளனர். அப்பகுதிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுநகரிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் ஊறணி வழியாக புறப்பட்ட படையினர் பிள்ளையாரடி வரை சென்று மீண்டும் நகருக்குத் திரும்பிவிட்டனர்.

# மோதலை நிறுத்த முற்போக்கு எழுத்தாளர்கள் கோரிக்கை

இலங்கையில் மீண்டும் வெடித்துள்ள உள்நாட்டு யுத்தத்தால் அப்பாவி மக்கள் அநியாயமாகச் சாவது, பல லட்சக் கணக்கில் அகதிகளாகிப் பரிதவிப்பது, நகரங்களும் கிராமங்களும் இடிபாடுகளாகி வருவது ஆகியன குறித்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆழ்ந்த விசனமும் அதிர்ச்சியும் அடைவதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அழிவுகர யுத்தத்தை உடன் நிறுத்துமாறும் அப்பாவி மக்கள் அழிந்துபடுவதைத் தவிர்க்குமாறும் பிரச்சினைக்கான ராணுவ யுத்தத் தீர்வைக் கைதுறந்து மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்புமாறும் இ. மு. எ. ச. சம்பந்தப்பட்ட தரப்புகளை மானுடத்தின் பேரால், மனித நேயத்தின் பேரால் கேட்டுக்கொள்ளவதாகவும் அறிக்கை கூறுகிறது.

மனித உயிர்களைப் பலிகொள்வதன் மூலம் ரத்தபெருக்கின் மூலம் பரஸ்பர மனித சங்காரத்தின் மூலம் எந்தப் பிரச்சினைக்கும், குறிப்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என்பதையும், இனப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு இருக்கமுடியாது என்பதையும் மாறாக அரசியல் தீர்வு ஒன்றுமட்டும் இருக்க முடியும் என்பதையும் சாவுகளுக்கும் பயங்கர அழிவுகளுக்கும் மத்தியில் வலியுறுத்துகிறது.

தமிழ் மாநிலம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் மட்டுமேதான் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான தீர்வு கண்டிட முடியும். இதன் மூலமே வன்முறைக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கும் அநியாயச் சாவுகளுக்கும் தேசிய பேரழிவுக்கும் முடிவுகட்டி நாட்டையும் மக்களையும் ஜனநாயகத்தையும் மனிதத்துவத்தையும் பாதுகாக்க முடியும் என்றும் அறிக்கை வலியுறுத்துகிறது.

## புலிகள் காட்டுக்குள்:

# அரசு அப்பாவிகளை வேட்டையாடுகிறது

## யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது-குகனேஸ்வரன் எம்.பி

(எம். பி. எம். அஸ்ஹர், வீ. தனபாலசிங்கம்)

"இன்று நடைபெறும் யுத்தம் தமிழர்களுக்கெதிரானதல்ல புலிகளுக்கெதிரானதே என்றும், நீதிக்கும் அநீதிக்கும் இடையிலான யுத்தம் என்றும் அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கம் கூறுவது எல்லாவற்றையும் கேட்கும் போது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், அழிவதெல்லாம் தமிழ் மக்கள்தான். புலிகள் பின்வாங்கிவிடுகிறார்கள் அல்லது காட்டுக்குள் சென்றுவிடுகிறார்கள். அரசாங்கம் அப்பாவிகளைத்தான் வேட்டையாடுகிறது" என வன்னி மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. இராஜா குகனேஸ்வரன் வியாழனன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாகாண சபைகள் தொடர்பான மூன்று திருத்தச் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய குகனேஸ்வரன், "பாசிசத்தை அழிக்கும் அதேவேளை, தேசிய இனப் பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு கண்டாக வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:-

கடந்த 25 நாட்களுள் ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவி தமிழ்மக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாகிவிட்டனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான வீடுகளும், பாடசாலைகளும், சொத்துக்களும் நாசமாகிவிட்டன.

புலிகள் இன்று இவ்வளவு தூரம் பலம் பொருந்தியவர்களாக இருக்கிறார்கள் என்றால், அதற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று கோடிக்கணக்கான ரூபாக்களை செலவிட்டும், நூற்றுக்கணக்கான படை வீரர்களை பலிகொடுத்தும், ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களை அழித்தும் புலிகளுடன் ஒரு யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கம் சரியான முறையில் செயல்பட்டிருக்குமானால், வடக்கு கிழக்கில் இப்படியானதொரு சூழ்நிலையோ, யுத்த நிலையோ தோன்றியிருக்காது. அபிவிருத்திக்கு செலவிடப்பட வேண்டிய பணம் யுத்தத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. யுத்தத்துக்கான பிரசாரமும் வீதிக்கு வீதி பணம் திரட்டலும் நடைபெறுகிறது. பாசிசத்தை அழிக்க வேண்டுமென்பதில் எமக்கு எதுவித கருத்து வேறுபாடும் கிடையாது. பாசிசத்துக்கு எதிராக விடாப்பிடியாகப் போராடியவர்கள் நாம். ஆனால், பாசிசத்தை வளர்த்து புலிகளுடன் குலாவியவர்கள் அரசாங்கத்தினரே. அதே பாசிசத்துக்கெதிராக இன்று அதே அரசாங்கம் யுத்தம் புரிகிறது. யுத்தத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

மாகாண சபைக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கி தமிழ் மக்கள் தங்களது பிரதேச அபிவிருத்திகளை தாங்களே கவனித்துக் கொள்ளும் சூழ் நிலையை உருவாக்குவதன் மூலமே இப் போராட்டத்தில் வெற்றி பெற முடியும்."

www.tamilarangam.net

# தமிழக புலிகள் ஆதரவாளர் மீது மத்திய மாநில அரசுகளின் கவனம்!

"மக்கள் இல்லாத மண்ணை நாங்கள் நேசிக்கவில்லை"

– தோழர் நாபா.

(நமது சென்னை நிருபர்)

ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபாவும் அவரது சகாக்கள் சிலரும் சென்னையில் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மத்திய, மாநில அரசுகளின் கவனம் தமிழ் நாட்டில் உள்ள ஈழப் புலிகளின் ஆதரவாளர்கள் மீது திசை திரும்பியுள்ளது.

இலங்கையில் இந்திய அமைதிப்படையை எதிர்த்து நின்ற புலிகளுக்கு தமிழகத்திலுள்ள ஆதரவாளர்கள் பெரும் உதவியாக இருந்ததாக சந்தேகிக்கப்படுகிறது. இத்தகைய ஆதரவாளர்களில் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் உட்பட பல பிரமுகர்களும் உள்ளனர் எனத் தெரிய வருகிறது.

அரசியல்நிலையில்மட்டுமின்றி பொலிஸ், சுங்கத்துறை மற்றும், அரசு அதிகாரிகள் மத்தியிலும் ஈழப் புலிகளுக்கு ஆதரவான பலர் உள்ளனர் என்பதும் அறியப்படுகின்றது.

குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில், தான் புலிகளுக்கு கடும் ஆதரவு உண்டாம். அந்தப் பகுதியின் பிரபல கடத்தல்காரர்கள் புலிகளின் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்து செயல்படுகிறார்கள் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

வட இலங்கையில் மயிலிட்டிக்கும் வேதாரணியத்துக்குமிடையில் ஈழப் புலிகள் தமிழகத்திலிருந்து ஜீப் வண்டிகள் உட்பட தங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் எடுத்துச் செல்ல இந்தக் கடத்தல்காரர்களே பெருந்துணை புரிந்ததையும் இதனால் புலிகளிடமிருந்து இவர்களுக்கும் இப்பகுதி மக்களுக்கும் நல்ல வருமானம் இருந்து வந்தது என்றும் சொல்லப்படுகிறது.

வேதாரணியம்கடற்கரைப் பகுதியில் உள்ளவர்கள் ஈழப் புலிகளுக்கு பேராதரவாக உள்ளனர் என்பது குறித்து இந்திய அமைதிப் படைத் தளபதியே மத்திய அரசிடம் முன்னர் புகார் செய்திருந்தார். குறிப்பாக அப்பகுதி சுங்க அதிகாரிகள் மீது தான் அவர் குறை கூறியிருந்தார். சமீபத்தில் சில தமிழக சுங்க அதிகாரிகள் ஈழப் புலிகளால் வட இலங்கைக்குக் கடத்தப்பட்டது கூட அவர்களுக்கிடையில் நிலவிய மனஸ்தாபங்களைத் [illegible] தீர்த்துக் கொள்வதற்குத்தானாம்.

வேதாரண்யம் பகுதியை புலிகள் ஆக்கிரமித்துக் கொண்டதால் இதர ஈழப் போராளிகள் இராமேஸ்வரம் பகுதியிலேயே தங்கள் நடவடிக்கைகளை வைத்துக் கொள்ள வேண்டியிருந்ததாம்.

தமிழ்நாட்டில் ஈழப்புலிகள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு தமிழகத்திலுள்ள பல தீவிரவாதிகளே உதவியுள்ளனர் என்று பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். அவர்களில் பலர் பிரிந்து சென்ற திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிசார் கூறுகின்றனர். இவர்களிலும் கூட ஈழப்புலிகளுக்கு ஆயுதங்களை தயாரித்துக் கொடுக்கும் பல தொழிற்சாலைகளை கோயம்புத்தூரில் நடத்துபவர்தான் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் என அவர்கள் தெரிவித்தனர். இவர்களுக்கு ராமகிருஷ்ணன் என்பவர் தான் தலைவராம். அண்மையில் இவர் இலங்கையில் பிரபாகரனை சந்தித்து விட்டு வந்ததை பத்திரிகைகளில் பெரிதாக விளம்பரப் படுத்தியிருந்தார்.

ஆதரவாளர்களின் தயவு இல்லாமல் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களை கடந்த செவ்வாயன்று அத்தனை சுலபமாக கொலை செய்துவிட்டு ஏழு புலிகள் தப்பியிருக்க முடியாது என்பது பொலிசார் வாதம். சீக்கிரம் இந்த ஆதரவாளர்களை சிக்க வைப்போம் என்று பொலிசார் நம்பிக்கை தெரிவித்தனர்.

கடந்த ஈராண்டுகளில் தமிழகத்தின் பல பகுதிகளில் சுமார் 35 வீடுகளை ஈழப் புலிகளுக்கு அவர்களது ஆதரவாளர்கள் வாடகைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தனராம். இந்த வீடுகளை வாங்குவதற்கு புலிகள் முயன்றனர் என்றும் ஆனால் அது முடியவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

ஈழப் புலிகள்மீது தமிழக அரசுக்கு இப்போது உண்மையாகவே கோபம் வந்துவிட்டது. ஏனெனில் தி.மு.க. ஆட்சிக்கு ஈழப் புலிகளால் ஆபத்து வந்துவிடலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. எனவே தன்னைத் தான் காத்துக் கொள்ளவாவது புலிகளின் நடமாட்டத்தை தமிழக அரசு கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே அது மத்திய அரசின் உதவியுடன் கடலோரப் பகுதிகளில் கட்டுக்காவலை அதிகரித்து வருகிறது. அதேநேரத்தில் அது புலிகளுக்கு எதிரான அனைத்துப் போராளிகளின் இயக்கத்தையும் முடக்கிப் போட்டுவிட்டது.

# 'இந்தியத் தலைவர்கள் வழிதவறிவிடக் கூடாது' –ரஞ்சன்

(எம்.பி.எம். அஸ்ஹர்)

எல்.ரி.ரி.ஈ.யின் பொய்ப் பிரசாரம், ஏமாற்றுவேலை ஆகியவற்றை நம்பி இந்தியத் தலைவர்கள் வழி தவறி விடக்கூடாது என அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று கூறினார்.

எனது நல்ல நண்பர் கருணாநிதி நிலைமையை உணர்ந்து செயல்படவேண்டும். இலங்கையில் இனப் படுகொலை நடைபெறுவதாக கூறும் அவரால் நம்பி வந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களைப் பாதுகாக்க முடியவில்லையே? என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

முன்னாள் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி இப்போது இலங்கை பற்றி பேசுகிறார். புலிகளால் ஏமாற்றப்பட்டு 1500 இந்தியப்படை வீரர்கள் உயிரிழக்கவும் 3 ஆயிரம் பேர் காயமடையவும் நேரிட்டதை அவர் மறந்துவிடக் கூடாது எனவும் அமைச்சர் ரஞ்சன் சுட்டிக்காட்டினார்.

மந்திரிசபை கூட்டத்தின் பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அமைச்சர் ரஞ்சன் மேலும் கூறியதாவது:

எல்.ரி.ரி.ஈ. அரசாங்கத்தை ஏமாற்றியது. பொது சனத் தொடர்பு சாதனங்களையும் ஏமாற்றப்பார்க்கிறது. நாம் நேபாம் குண்டுகள் வீசுவதாக எல்.ரி.ரி.ஈ. பொய்ப்பிரசாரம் செய்கிறது. எந்த இடத்திலும் நாம் நேபாம் குண்டுகளை பாவிக்கவில்லை.

எனது நல்ல நண்பர் கருணாநிதி எல்.ரி.ரி.ஈ.யின் பொய்ப் பிரசாரத்துக்குப் பலியாகிவிடக் கூடாது. இந்த எல்.ரி.ரி.ஈ.யினர் தான் ராஜீவ்காந்தி அரசையும் ஏமாற்றினர். இதனால் 1500 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். 3 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினரின் பொய்களை நம்பி ஏமாறவேண்டாம் என கருணாநிதி, ராஜீவ்காந்தி ஆகியோரைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் முக்கிய தலைவர்கள் பாதுகாப்பு கிடைக்குமென நம்பி இந்தியாவுக்குச் சென்றனர். ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கவில்லை. சென்னையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். இக் கொலைகளைச் செய்தோரைப் பிடிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறிகிறேன்.

நண்பர் கருணாநிதி நடந்தவற்றை மறக்கக் கூடாது. இந்தியத் தலைவர்கள் வழி தவறவோ உணர்ச்சிவசப்படவோ கூடாது.

இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் நிலைமையை நன்கு உணர்ந்து பேசுகிறார், செயல்படுகிறார். மாலைதீவிலிருந்து திரும்பிய பின் அவர் நிலைமையைப் பேசியுள்ளார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ..ட்டுநகரில் 25 கட்டிடங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது

## நுழைவாயில்களில் பீரங்கியுடன் காவல்; வளவுகளுக்குள் கால்நடையாக பவனி

மட்டக்களப்பு,

மட்டக்களப்பு நகரில் பல கட்டிடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நகருக்கு வரும் முக்கிய வீதிகளில் பாரிய பீரங்கிகளையும் நிறுத்தி பாதுகாப்பை மிகப் பலப்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு நீதிபதி வாசஸ்தலம், வாடிவீடு. இந்த இளைஞர் மன்ற கட்டிடம், பொலிஸ் நிலையம், இந்துக்கல்லூரி, ..றாணி பாடசாலை, புகையிரத நிலைய விடுதி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட சுமார் 25 கட்டிடங்களில் இரு.. ..ணுவத்தினர் நிலைகொண்..ளனர்.

கோட்டைமுனை பாலம். கல்லடி பாலம், சிவானந்த வித்தியாலய வீதி, ஆனைப்பந்தி பிள்ளையார் கோயில் சந்தி, ஆஸ்பத்திரி சந்தி, தாண்டவன் வெளிச்சந்தி போன்ற இடங்களில் பீரங்கிகளுடன் இராணுவத்தினர் காவலில் நின்று வருகின்றனர். சில இடங்களில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு மக்கள் சோதனை செய்யப்படுகின்றனர்.

இது தவிர மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் கவச வண்டிகள், பீரங்கி வாகனங்களில் இராணுவத்தினர் ரோந்து திரிவதைக் காண முடிகிறது. சில வேளைகளில் இராணுவத்தினர் கூட்டம் கூட்டமாக கால்நடையாக வீதிகளுக்கு உள்ளே வளவுகளுக்கூடாகவும் நடமாடித் திரி..ன்றனர்.

விடுதலைப் புலிகள் யாராவது இங்கு இருந்தால் தகவல் தரும்படியும் பொது மக்களை படையினர் கேட்டு வருகின்றனர். முன்னர் இந்திய இராணுவத்தினர் கையாண்ட அதே பாணியி..லேயே இவர்களும் செயல்படுவதாக மட்டக்களப்பு மக்கள் கூறுகின்றனர். நகருக்குள் மாத்திரம் தற்போது இரண்டாயிரத்திற்கும் மூவாயிரத்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

எனினும் படையினர் நகருக்குள் பிரவேசித்ததன் பின்னர் நேற்றுவரை வேட்டுச் சத்தங்கள் எதுவும் கேட்டதாகத் தெரியவில்லை. தேடுதல்களும் இடம்பெறவில்லை. அடுத்த என்ன நடக்குமோ என்ற கேள்வியுடனான ஒருவித அமைதியே நகரில் நிலவுகிறது.

வீதிகளில் படையினரின் வாகனங்களைத் தவிர வேறு வாகன ஓட்டங்களைக் காண முடியவில்லை. காகித ஆலைலொறிகள், அரச திணைக்கள ஜீப் வண்டிகளிலும் படையினர் திரிகின்றனர். வயோதிபர்களும், பெண்களுமே வீதியில் கூடுதலாக நடமாடித் திரிகின்றனர். கடைகள், அலுவலகங்கள், பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டே கிடக்கின்றன. வைத்திய சாலையும் இயங்கவில்லை.

### 200 பேர் தடுத்துவைப்பு

இது இவ்விதமிருக்க, நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நகரிலுள்ள சுமார் 200 பேர் சந்தி ஒன்றில் திடீரென தடுத்து வைக்கப்பட்டனர். வயோதிபர்களும் இதில் அடங்கியிருந்தனர். பிற்பகல் 5 மணியளவில் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

# தமிழகத்திலுள்ள போராளிகள் மீண்டும் இலங்கை திரும்பி போராடத் திட்டம்

ராமேஸ்வரம்,

தமிழகத்தில் இப்போது தங்கியுள்ள இலங்கைப் போராளிகள் இலங்கை சென்று, தமிழ் மக்களுக்காக தங்களுடைய போராட்டத்தை அங்கே மீண்டும் தொடரத் திட்டமிட்டுள்ளனர். மண்டபம் அகதிகள் முகாமில் வெள்ளியன்று நடந்த இரங்கல் கூட்டத்தில் இது தெரிய வந்தது.

சென்னையில் சுட்டுக் கொல்லப்பட்ட க. பத்மநாபா மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து முகாமில் பேசிய கருணாகரன் (டெலோ) ,காதர் (புளொட்) சிவானசுந்தரம் (ஈ. என். டி. எல். எஃப்.), கண்ணன் (ஈ. பி. ஆர். எல் எப்-) ஆகியோர் இதைக் குறிப்பிட்டனர்.

### பழிவாங்குவோம்

பத்மநாபா உள்ளிட்ட போராளிகளைச் சுட்டுக் கொன்றவர்களை பழிவாங்காமல் விடமாட்டோம். விடுதலைப் புலிகளின் அராஜகத்துக்கு முடிவு கட்டுவோம் என்று அவர்கள் தங்களுடைய பேச்சில் குறிப்பிட்டனர். இயக்கத் தலைவர்கள் ஒன்றிரண்டு பேரை அழிப்பதால், போராளிகளின் போராட்ட உணர்வுகளை அழித்து விட முடியாது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

சிறி சபாரத்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகுகூட டெலோ இயக்கம் அழிந்துவிடவில்லை என்பதை அவர்கள் உதாரணத்துக்குச் சுட்டிக்காட்டினர். பத்மநாபா வழியில் போராட்டத்தைத் தொடருவோம் என்று அவர்கள் கூறினர்.

தமிழகத்தில் இலங்கைப் போராளிகள் சிறைக் கைதிகள் போல நடத்தப்படுவதாக வருத்தம் தெரிவித்த பேச்சாளர்கள், அஞ்சலி செலுத்த மாலைகளை கடையில் வாங்கி வருவதற்குக் கூட முகாமைவிட்டு வெளியே செல்ல அனுமதிக்கவில்லை என்று புகார் கூறினர்.

இது குறித்து, மண்டபம் முகாமுக்கு வருகை தந்த மாவட்ட வருவாய்துறை அதிகாரியிடம் கேட்ட போது, போராளிகளை முகாமை விட்டு வெளியே செல்ல அனுமதிக்காமல் கடும் பாதுகாப்போடு வைத்திருக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் பதிலளித்தார். முகாமுக்குள் பிறர் செல்லவும் கலெக்டர் அனுமதி பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ள போராளிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிய அவர்கள். இல்லாவிடில் உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

தமிழக அரசு ஒருதலைப் பட்சமாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தியாவுக்கு ஆதரவாக இருந்தவர்களுக்கு இங்குமதிப்பு இல்லை. இந்திய எதிர்ப்பாளர்களுக்குத் தான் இங்கு மரியாதை தரப்படுகிறது. ராமநாதபுரம் அருகே பட்டணம் காத்தான் என்ற ஊரில் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்குக் காரணமானவர்கள் கைது செய்யப்படவில்லை. சென்னை சம்பவத்தில் ஈடுபட்டவர்களும் தப்பி ஓடி விட்டனர். இந்த நிலையில் பிற போராளிகளைக் கைது செய்தது சட்ட விரோதமாகும் என்று போராளிகள் கூறினர்.

# பத்மநாபா கொலை குறித்து 22 பேர் தமிழ்நாட்டில் கைது

சென்னை, ஜூலை 4

சென்னையில் ஈ.பி.ஆர். எல். எவ். தலைவர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக இந்திய பொலிஸார் 22 பேரைக் கைது செய்துள்ளனர்.

இக்கொலைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் கூறியுள்ளனர். 22 எல்.ரி.ரி.யி.னர் கைது செய்யப்பட்டிருப்பது சில துப்புகளைத் தரலாம் என பொலிஸ் சமிஷனர் பி. துரை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலதிபர் கே. பத்மநாபா உட்பட இயக்கத்தின் 13 உறுப்பினர்களும் சிவிலியன் ஒருவரும் கடந்த 19ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

www.tamilarangam.net

# "மாகாணசபை திருத்த சட்டமூலங்கள் வாபஸ் பெறப்படவேண்டும்"

## சபையில் திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் உரை

(எம்.பி.எம். அஸ்ஹர், வீ. தனபாலசிங்கம்)

இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த போது இடம்பெற்ற மாகாணசபை தேர்தல் முறையற்றதென்றால் அதே படை இருந்த போது நடந்த ஜனாதிபதி தேர்தல் பொதுத் தேர்தல் ஆகியனவும் முறையற்றனவையே. இந்தக் காரணத்துக்காக மாகாணசபைகலைக்கப்படவேண்டுமென்றால் ஜனாதிபதியும் பதவி நீங்க வேண்டும். பாராளுமன்றமும் கலைக்கப்படவேண்டும் என திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

மாகாண சபைகள் தொடர்பான திருத்தச் சட்ட மூலங்களை வாபஸ் பெறுமாறு கோரிய அவர், மக்களுக்காக மண்ணை நேசிக்கும் சர்வதேசியவாதிகள் தாங்கள் என்றும் குறிப்பிட்டார்.

### இலங்கை-இந்திய ஒப்பந்தம்

திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் எம். பி. மேலும் பேசியதாவது:

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜனநாயக ரீதியிலானது. இந்நாட்டின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளை இது ஆரம்பித்து வைத்தது. ஆனால் பாஸிஸ எல்.ரி.ரி.ஈ. அதற்கு குந்தகம் விளைவித்தது. மக்களைச் சூறையாடி கொள்ளையடித்துக் கொண்டே எல்.ரி.ரி.ஈ. அரசுடன் பேசியது.

இந்திய அமைதிப்படை இருக்கும்போது நடைபெற்ற மாகாணசபை முறையற்றதென்றால் இந்திய படை இருக்கும் போது நடந்த ஜனாதிபதி தேர்தல், பொது தேர்தல் ஆகியனவும் முறையற்றனவையே. மாகாண சபைத்தேர்தல்கள் முறையற்றதெனக் கூறி அவற்றை கலைப்பதானால் ஜனாதிபதியும் பதவி நீங்கவேண்டும். பாராளுமன்றமும் கலைக்கப்படவேண்டும்.

### எல். ரீ. ரீ. ஈ.க்கு உரிமை இல்லை

எல். ரீ. ரீ. ஈ. தேர்தலில் பங்குபற்ற மறுத்தது. பங்குபற்றியோரைக் கொல்ல முயற்சித்தது. இந்நிலையில் மாகாண சபைகளைக் கலைக்க சொல்ல எல். ரீ. ரீ. ஈ.க்கு தார்மீக ரீதியல் உரிமை இல்லை.

இந்திய அமைதிப்படை திரும்பிய பின் பல கொலை செய்த எல். ரீ. ரீ. ஈ. மக்களின் கோடிக்கணக்கான சொத்துக்களை சூறையாடியது இந்த எல். ரீ. ரீ. ஈ.யா ஜனநாயக வழிக்கு வரப் போகிறது? இவர்களிடமா மாகாண சபைகளை ஒப்படைக்க நினைக்கிறீர்கள்?

இன்னமும் வடக்கு - கிழக்குக்கு மாகாண பொலிஸ் கமிஷன்கள் நியமிக்கப்படவில்லை. 1988இல் அமைக்கப்பட்ட மாகாண சபைக்கு இன்னமும் பொலிஸ் அதிகாரம் கிடைக்கவில்லை. இந்நிலையில் எப்படி அதிகாரப் பரவலாக்கல் அமுலாகும்?

### வேடிக்கை

இந்த மே மாதத்திலிருந்து வட - கிழக்கு மாகாணசபைக்கு அதிகாரம் கொடுக்க மாட்டோம் என எல். ரீ. ரீ. ஈ. கூறியதை நீங்கள் ஏற்றீர்கள். அதிகாரத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டு வரதராஜப் பெருமாளுக்கு ஆட்சி நடத்தத் தெரியவில்லை எனக் கூறுவது வேடிக்கையானது.

வரதராஜப் பெருமாளும் மற்றவர்களும் ஓடிவிட்டார்கள் எனக் கூறுவோர் அவர்களைப் பாதுகாக்காமல் குற்றம் கூறிக்கொண்டே இருந்தனர்.

### வாபஸ் பெற வேண்டும்

மாகாண சபைகள் திருத்த சட்ட மூலங்களை அரசு வாபஸ் பெற வேண்டும். இவை தமிழ் மக்களின் உரிமைகளை பறிப்பவை. எதிர்கால வரலாற்றாசிரியர்கள் இவை பற்றி எழுத மறந்திடும்.

எல். ரீ. ரீ. ஈ. ஈழக் கோரிக்கையை கைவிடாமல் மாகாண சபைக்குள்ளும் பாராளுமன்றத்துக்குள்ளும் நுழைய முயற்சித்தது. அதற்கு உதவுமுகமாகவே அரசும் 6ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது பற்றி யோசிப்பதாக பேசப்படுகிறது. ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் சுயாட்சி பெறுவதே எமது நோக்கம். தோழர் பத்மநாபா கூறியது போல் மக்களுக்காக மண்ணை நேசிக்கும் சர்வதேசியவாதிகள் நாங்கள்.'

### சுரேஷ் கோரிக்கை


ஈ. பி. ஆர். எல். எப் செயலதிபர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம். பி. அங்கு சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். அவையாவன:—

* யுத்தத்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

* வட – கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் உடனடியாக உணவு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* உடனடியாக மின்சார வசதிகளை அனைத்து பகுதிகளுக்கும் ஏற்படுத்த வேண்டும்.

* இலங்கை இராணுவத்தினர் கைது செய்துள்ள பொது மக்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.



EPIC
Boite-No—69.
7, Rue-Racine.
95140, Garges.
FRANCE.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்தி தொடர்பு நிறுவனமான
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்